**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி - 2019**

-----------------------------------------------------------------------------------------

**1.1 அபிப்பிராயம்**

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் (“வங்கி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு

அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 டிசெம்பர் 31 இல் ரூபா 2,022,797 பெறுமதியான இணக்கம் செய்யப்படாத செலவு மீதி ‘‘ஸ்லிப் கட்டுப்பாட்டு கணக்கில்’’ பதியப்பட்டுள்ளது. | ‘‘ஸ்லிப் கட்டுப்பாட்டு கணக்கில்’’ நீண்டகால நிலுவையாக உள்ள இணக்கம் செய்யப்படாத நிலுவைகளை சரி செய்வதற்கு கிளை முகாமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் செய்யப்படாத நிலுவைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும். |
| (ii) | 2019 டிசெம்பர் 31 இல் ஏனைய பொறுப்புகள் கணக்கில் ரூபா 2,895,111 பதியப்பட்ட போதிலும் இது தொங்கல் கணக்கு நிலுவையாகும். | இத் தொங்கல் கணக்கு நிலுவையானது தற்போது குறிப்பிடபட்ட கிளைகளின் சரி செய்யப்பட்ட போதிலும் குருணாகலை கிளையின் இது திருத்தப்படவில்லை. | வங்கியின் தொங்கல் கணக்கு நிலுவைகள் அனைத்தையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கவும். |

## 1.6 பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கணக்குகள்

### 1.6.1 பெறுவனவுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மோசடி கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,400,000 தொகை நிதி அறிக்கையில் ஏனைய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>இது 1999 ஆம் ஆண்டு நிகழ்ந்த இரண்டு மோசடிகளை பிரதிபலிக்கின்றது. இந்த நட்டத்தை மீட்பதென்பது சந்தேகத்திற்குரியது. | 2020 இல் இத் தொகையை பதிவழிப்பதற்கு இயக்குநர் சபை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. | மோசடி கணக்கு நிலுவையை தீர்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும். |
| (ii) | 2019 டிசம்பர் 31 இல் முற்பண வாடகையாக செலுத்திய ரூபா 2,406,460 ஏனைய சொத்துக் கணக்கில் பதியப்பட்டு இருந்த போதிலும் இத்தொகை முன்னால் உரிமையாளரிடமிருந்து 22 யூன் 2020 வரையில் அறவிடப்படாதிருந்தது.<br>விபரம் கீழே தரப்படடுள்ளது.<br>கம்பஹா 1,049,600<br>கண்டி 825,000<br>ஹொரண 531,860 | உரிமையாளரிடமிருந்து பெற வேண்டிய தொகையை அறவீடு செய்ய உரிய சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய பெறுவனவுகளை மீட்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும். |
| (iii) | 2019 டிசம்பர் 31 இல் திறைசேரியிலிருந்து பெற வேண்டிய மூத்த குடிமக்கள் வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் மொத்தம் ரூபா 617,374,536 தொகை காணப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.<br>2017 192,529,105<br>2018 249,193,681<br>2019 131,694,637<br>பெற வேண்டிய வட்டி 43,957,113<br>மொத்தம் 617,374,536 | 2017 ஆம் ஆண்டுக்கான மூத்த குடிமக்கள் வட்டி மானிய பெறுவனவு ரூபா 192,529,105 தொகையானது 29.08.2020 இல் திறைசேரியினால் கொடுப்பனவு செய்யப்பட்டது. | பொது திறைசேரிப்புடன் தொடர்பு கொண்டு பெற வேண்டிய மூத்த குடிமக்கள் வட்டியான 2018 மற்றும் 2019 தொடர்பாக கலந்து ஆலோசிக்கவும். |

**1.6.2 முற்பணங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 டிசம்பர் 31 இல் ரூபா 1,563,966 பெறுமதியான நீண்ட கால முற்பண தொகை தீர்க்கப்படாது காணப்பட்டது. | கீழே குறிப்பிடப்பட்ட நீண்டகால நிலுவை தொகை தவிர்ந்த ஏனைய முற்பணங்கள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளன. G/L-2/22/4703<br><br>2007 ஆம் ஆண்டுக்கு முன் — ரூபா. 1,386,771.10 — நிலுவைகளை தீர்ப்பதற்கான விபரங்கள் பெறப்பட வில்லை<br><br>2012 இல் — ரூபா. 40,000 — உரிய அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கப்பட் டுள்ளது<br><br>அடையாளங் காணப்படாத தீர்ப்பனவுகள் — (120,186.80)<br><br>மீதி — ரூபா. 1,306,584.20 | நீண்டகால நிலுவை தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் |
| (ii) | 2019 இல் மொத்த செலுத்தப்படாத கடன் மற்றும் முற்பணங்கள் EPF கடன்கள் உள்ளடங்கலாக 21.21 மற்றும் மொத்த செலுத்தப்படாத கடன்கள் மற்றும் முற்பணங்கள் EPF கடன்கள் தவிர்ந்த 7.73 ஆக காணப்பட்டது. இது துறைசார் விகிதமான முறையே 5.5 மற்றும் 3.9 விட உயர்வானதாகும். | ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏட்பட்ட பெருளாதார வீழ்ச்சியினால் 2019 ஆம் ஆண்டில் மொத்த NPL விகிதம் மற்றும் EPF தவிர்ந்த NPL விகிதம் சற்று அதிகரித்துள்ளது. | வங்கியின் செலுத்தப்படாத கடன் மற்றும் முற்பணங்கள் நிலுவையை குறைக்க தேவையான மீட்பு நடவடிக்கைகளை எடுக்கவும். |

**1.7 சட்டங்கள், விதிகள், கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 ஏப்ரல் 29 ஆம் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல் PED 03/2016 | 2019 ஆம் அண்டு உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 20,770,371 யை வங்கியானது அதன் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவீடு செய்யாது | வங்கிகளின் கூட்டு ஒப்பந்த நிபந்தனையின் படி ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி பொறுப்பானது வங்கியினால் | வங்கி ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி தொடர்பாக (பொது முயற்சிகள் சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அதன் சொந்த நிதியில் இருந்து கொடுப்பனவு செய்திருந்தது. | செலுத்தப்படும். | இலக்கம் 03/2016 2016 ஏப்ரல் 29 ஆம் திகதி) யை கடைப்பிடிக்கவும். வேண்டும். |
| 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கி சட்ட வழிகாட்டளின் பிரிவு 3(2) (i) இன் படி சபையின் அமைப்பு, சபை இயக்குனர்களின் எண்ணிக்கை 7 க்கு குறைவாக இருக்க கூடாது மற்றும் 13 மேல் இருக்க கூடாது. | 2019 டிசம்பர் 31 இல் 6 இயக்குணர்களை மட்டுமே சபை கொண்டிருந்தது. | SMIB சட்டத்திற்கமைவாக அமைச்சரால் நியமிக்கப்பட்ட சரியான மற்றும் பொருத்தமான 9 நபர்களைக் கொண்டது. SMIB சட்டத்திலுள்ள விதிகளின்படி ஒரு கோரத்திற்கு குறைந்தபட்சம் மூன்று சபை உறுப்பினர் குறித்த தேவையை தவிர நியமிக்கப்பட்ட குறைந்தபட்ச சபை உறுப்பினர் குறித்து எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. | இயக்குனர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கையை ஏற்பாடுகளுக்கு அமைய கடைப்பிடிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 419,073,514 மற்றும் முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 244,472,029 எனவே, நிதி விளைவுகளில் ரூபா.174,601,515 முன்னேற்றம் காணப்பட்டது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வருமான வரி செலவுகளில் ஏற்பட்ட ரூபா. 154,680,405 குறைவுமே இவ் அதிகரிப்புக்கு காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

வங்கியின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டைவிட ரூபா 456 மில்லியன் அல்லது 8.26 சதவீதம் அதிகரித்துள்ளது. இது முக்கியமாக முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட ரூபா 1.6 பில்லியன் அல்லது 4.8 சதவீதம் அதிகரிப்பே இதற்கான காரணம். வட்டி செலவு ரூபா 373 மில்லியன் அல்லது 10 சதவீதம் அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது முக்கியமாக வாடிக்கையாளர் வைப்புத் தொகையில் ஏற்பட்ட ரூபா 4.5 பில்லியன் அல்லது 13.4 சதவீதம் அதிகரிப்பே இதற்கான காரணம். 2019 ஆம் ஆண்டில் ஆண்டுச் சம்பள உயர்வு காரணமாக தனிபட்ட செலவு 58 மில்லியன் அல்லது 7 சதவீதம் அதிகரித்துள்ளது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கித் துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வங்கியின் சில முக்கியமான கணக்கியல் விகிதங்களில் பின்வரும் அவதானிப்புக்கள் கண்டறியப்பட்டன.

| விபரம் | துறை விகிதம் 2019 | 2019 | 2018 | வங்கி 2017 |
|---|---|---|---|---|
| **இலாப விகிதங்கள்** | | | | |
| சராசரி உரிமை மூலதன திரும்பல் (ROE) (சதவீதம்) | 6.8 | 7.73 | 4.82 | 3.62 |
| சராசரி சொத்து மீதான திரும்பல் (ROA) (சதவீதம்) | 0.8 | 1.11 | 1.13 | 0.98 |
| நிகர வட்டி அளவு (சதவீதம்) | 3.4 | 4.52 | 4.72 | 4.66 |
| **போதுமான மூலதன விகிதங்கள்** | | | | |
| மொத்த Tier 1 மூலதன விகிதம் | 12.3 | 21.04 | 21.69 | 23.74 |
| மொத்த மூலதன விகிதங்கள் | 15.6 | 21.77 | 22.23 | 24.29 |
| **சொத்தின் தரம்** | | | | |
| மொத்த செலுத்தப்படாத முற்பணம் (EPF கடன்கள் உள்ளடங்கலாக) | 5.5 | 21.21 | 22 | 19.37 |
| மொத்த செலுத்தப்படாத முற்பணம் (EPF கடன்கள் நீங்கலாக) | 3.9 | 7.73 | 7.0 | 4.5 |
| **திரவ விகிதங்கள்** | | | | |
| பணபுழக்க பாதுகாப்பு விகிதம் (சதவீதம்) | 53.1 | 121.05 | 83.91 | 86.88 |

(i) 2019 திசெம்பர் 31 இல் உரிமை மூலதனம் மீதான வருமானம் (ROE) 2.91 சதவீதம் அதிகரித்துள்ளது. இது சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 இல் இலாபம் அதிகரிப்பதற்கான முக்கிய காரணமாகும்.

(ii) 2019 ஆம் ஆண்டிற்கான நிகர வட்டி அளவு 4.52 சதவீதமாக இருந்தது. இது உரிமம் பெற்ற சிறப்பு வங்கி விகிதம் 3.4 சதவீதத்தை விட சிறிய அளவில் உயர்வானதாக காணப்பட்டது.

(iii) EPF கடன்கள் உட்பட வங்கியின் மொத்த செயற்படாத கடன் விகிதம், துறை விகிதமான 5.5 சதவீதத்தை விட மிக அதிகம். EPF கடன் வகையின் அதிக NPL விகிதமே காரணமாகும். இருப்பினும் EPF கடன்கள் பணத்தை திரும்ப˙ பெறும் கடன்களாகும் மற்றும் மத்திய வங்கி மூலம் மீட்டெடுக்க முடியும். EPF கடன்கள் இல்லாமல் மொத்த செயற்படாத கடன் விகிதம் 2019 ஆம் ஆண்டில் 7.73 சதவீதமாகும். இது துறை விகிதம் 3.83 சதவீத்தை விட உயர்வானதாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அடையாளம் காணப்பட்ட இழப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வங்கியின் கடன் பிரிவு 2016 செப்டெம்பர் 01 முதல் 2017 மார்ச் 31 வரையான கால கட்டத்தில் இரண்டு போலி தனியார் அமைப்புக்களின் ஊழியர்கள் என தங்களை அடையாளம் காட்டிய நாற்பத்தேழு (47) விண்ணப்பதாரிகளுக்கு ரூபா 66.34 மில்லியன் கடன்களை வழங்கியிருந்தது. இரண்டு போலி அமைப்புக்களின் ஊழியர்களாக தங்களை அடையாளம் காட்டிய விண்ணப்பதாரர்கள் அந்தத் கடன்களுக்கு விண்ணப்பிக்கும் போது போலி ஆவணங்களை சமர்ப்பித்தது தெரியவந்தது. 2019 டிசம்பர் 31 இல் மேற்குரிப்பிட்ட கடனில் ரூபா 61,528,617 நிலுவைத் தொகையாக இருந்தது. | மேற்கண்ட கடன்களை சம்பந்தப்பட்ட குற்றவாளிகளிடமிருந்து வசூலிக்க வங்கி சிஜடியில் வழக்கு பதிவு செய்துள்ளது. | குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இதற்கு பொறுப்பான ஊழியர்களை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிர்வாகம் 2019 ஆம் ஆண்டிற்கான நிதி தேவைகளுக்கான வெட் இறுதி கட்டணமாக ரூபா 12,609,581 ஐ 2020 ஜுன் 30 அன்று செலுத்தியிருந்தது. இது 2019 ஆம் ஆண்டுக்காக மேலதிகமாக செலுத்திய ரூபா 12,450,865 ஐ கருத்திற் கொள்ளாது செலுத்தியிருந்தது. | வங்கியின் வரி ஆலோசகர் வழங்கிய தொழில்நுட்ப ஆலோசனையின் படி, 2019/2020 காலத்திற்கான நிதிச் சேவைகளின் இறுதி வெட் கட்டணமாக ரூபா 12,609,581 ஐ செலுத்தியிருந்தது. இந்த கணிப்பீட்டில் டிவிடன் வருமானம், நியாயமான மதிப்பு ஆதாயம் மற்றும் நிதி நிறுவனத்துடன் பணியமர்த்தல் மீதான முதலீட்டு வருமானம் ஆகியவற்றின் நிதி அல்லாத வெட் வருமானமும் அடங்கும். 2019/2020 ஆண்டுக்கான இறுதி வெட் வருமாணத்திலிருந்து மேலேயுள்ள ஆதாரங்களின் வருமானத்தை விலக்குமாறு அவர்கள் எங்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். | உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுடன் இறுதி கொடுப்பனவுகளை செலுத்துங்கள். |

மேற்சொன்ன ஆதாரங்களை நிதியின் கீழ் மேற்கொள்வதை சவால் செய்வதன் மூலம் மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்கு வழக்கு கோப்பில் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றது. வெட் தீர்ப்பு வாதி வங்கிக்கு ஆதரவாக வழங்கப்பட்டால் அத்தகை நன்மையை கோர முடியும். ஆயினும் கூட வாதிக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டால், மேற்கூரிய வருமான ஆதாரங்களில் நிதி வெட் செலுத்தாமைக்கு வங்கி க்கு எந்த அபராதமும் விதிக்காது.

## 3.3 கொள்முதல் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒரு மைய வங்கி தீர்வை (Core Banking) கொள்முதல் செய்வதற்கான செயன்முறை ஜுன் 2016 இல் தொடங்கினாலும் கணக்காய்வு திகதி வரை புதிய மைய வங்கி தீர்வை வங்கியால் வாங்க முடியவில்லை. | வங்கி பெற்றிருந்த 5 விலை மனுக்களை 2020 ஜுலை 16 அன்று திறந்தது. இதன்பின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தொழில்நுட்ப மதிப்பீடு (கட்டம் - 1)ஐ பற்றிய மதிப்பீட்டைத் தொடங்கி தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையை பூர்த்தி செய்து 2020 டிசம்பர் 2 அன்று அமைசச்க கொள்முதல் குழுவுக்கு (மாநில பணம் மற்றும் மூலதன சந்தை மற்றும் மாநில நிறுவன சீர்திருத்தங்கள்) சமர்ப்பித்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு கட்டங்கள் முடிந்த பின் மதிப்பீட்டு செய்முறையின் முன்னேற்றத்தைப் புகாரளிக்க இந்த அறிக்கை எம்.பி.சிக்கு ஒரு இடைக்கால அறிக்கையாகும். மற்றும் நிதி மதிப்பீட்டைத் தொடர நிதி மற்றும் வன்பொருள் திட்டங்களை திறக்க ஒப்புதல் கோரியது. TEC கமிடி MPC ஒப்புதலை பெற்றவுடன் TEC நிதி ஏலங்களைத் திறந்து மதிப்பீட்டின் இறுதி கட்டமாக நிதி மதிப்பீட்டைத் தொடர ஏற்பாடு செய்யும். | வங்கிக்கான முக்கிய வங்கி தீர்வை வரையில் வாங்க தேவையான நடவடிக்கையை எடுக்கவும் |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

**கணக்காய்வு விடயம்**

வங்கியின் பணியாளர் நிலைப்பாட்டின் படி அங்கீகபிக்கப்டட பணியாளர் மற்றும் உண்மையான பணியாளர்கள் முறையே 467 மற்றும் 372 ஆக இருந்தனர் 2020 ஜுலை 31 நிலவரப்படி 95 பதவி வெற்றிடங்கள் இருந்தன. மேலும் 31 டிசம்பர் 2019 நிலவரப்படி பின்வரும் முக்கிய நிர்வாக பதவிகள் வெற்றிடமாக இருந்தது தெரிய வந்துள்ளது. இது வங்கியின் முறையான நடவடிக்கையை பாதிக்கக்கூடும்.

| விபரம் | பதவி வெற்றிட எண்ணிக்கை | பதவி வெற்றிடம் காலியான திகதி |
|---|---|---|
| DGM (கடன்) | 1 | 5/10/19 |
| DGM (நிதி மற்றும் திட்டமிடல்) | 1 | 23/4/16 |
| DGM (மனித வள அபிவிருத்தி முகாமைத்துவம்) | 1 | 13/3/12 |
| AGM (அபாய முகாமைத்துவம்) | 1 | 2/5/17 |
| AGM (கடன் நிர்வாகம்) | 1 | 1/3/17 |
| AGM (மதிப்பீடு) | 1 | 5/9/19 |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 14/8/14 |
| தலைமை முகாமையாளர் IT | 1 | 2/9/11 |
| தலைமை முகாமையாளர் (மீட்பு) | 1 | 20/9/17 |
| தலைமை முகாமையாளர் (கடன்) | 1 | 1/1/14 |

**முகாமைத்துவ கருத்துரை**

**DGM – கடன்**
திரு.L.I.ரணசிங்க 2020.10.26 அன்று DGM – கடன் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

**DGM – நிதி மற்றும் திட்டமிடல்/ DGM - மனித வள மேம்பாடு மற்றும் முகாமைத்துவம்**
DGM – நிதி மற்றும் திட்டமிடல் மற்றும் DGM – மனிதவள மேம்பாடு மற்றும் முகாமைத்துவ வெற்றிடங்கள் 31.05.2020 அன்று அறிவுறுத்தப்பட்டு நேர்காணல் நடாத்தப்பட்டன. DGM – நிதி மற்றும் திட்டமிடல் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி தனது தனிப்பட்ட காரணங்களைால் இந்த வாய்ப்பை ஏற்கவில்லை. DGM – மனிதவள மேம்பாடு மற்றும் முகாமை பதவிக்கு எந்த விண்ணப்பதாரி தேர்வு செய்யப்படவில்லை. 2020 ஒக்டோபர் 18 அன்று மீண்டும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. நேர்காணல் 2020 டிசெம்பர் 14 அன்று நடைபெற உள்ளன.

**AGM (அபாய முகாமைத்துவம்)**
பதவி வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு விளம்பரம், நேர்காணல் நடைப்பெற்று மற்றும் நியமனம் தெடர்பான வேளைகல் நடைபெறுகின்றன.

**AGM (கடன் நிர்வாகம்)**
செயற்பாட்டுத் தேவையின் அடிப்படையில் இந்த பதவியின் ஆளணி அமைப்பை திருத்துவதற்கு முன்மொழியப்பட்டது. இந்த திட்டம் இயக்குனர் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இயக்குநர்கள் குழுவின் முடிவின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**AGM (மதிப்பீடு)**
திரு.ஐ.எதிரிசூரிய அவர்கள் 30.04.2020 அன்று தலைமை முகாமையாளர்-மதிப்பீடு பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டார். வங்கியின் செயற்பாட்டுத் தேவையான அடிப்படையில், இந்த பதவிநிலை எதிர்காலத்தில் நிரப்பப்படும்.

**பரிந்துரை**

வங்கியின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

**தலைமை உள்ளக கணக்காய்வாளர்** செல்வி. என்.ஏ.ஆர்.நிரோஸினி டி சில்வா தலைமை உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு 4.12.2020 அன்று நியமிக்கப்பட்டார்.

**தலைமை முகாமையாளர் (IT)** வங்கியின் செயற்பாட்டு தேவையின் அடிப்படையில் இவ் வெற்றிடம் நிரப்படும். தற்போது ஐடி அமைப்பு ஒரு ஐடி ஆலோசகரின் மதிப்பாய்வில் உள்ளது மற்றும் அதன்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**தலைமை முகாமையாளர் - மீட்டெடுப்பு** வங்கியின் செயல்பாட்டுத் தேவையின் அடிப்படையில் இந்த வெற்றிடம் நிரப்பப்படும்.

**தலைமை முகாமையாளர் - கடன்** வங்கியின் செயற்பாட்டுத் தேவையான அடிப்படையில் இவ் வெற்றிடம் நிரப்பபடும்.